*1990 ஜனவரி 22]*

## தெலுங்கு கங்கைத் திட்டம்.

*42—திரு. இரெ. இராசமாணிக்கம்,
திரு. கே. ஏ. செங்கோட்டையன்,
திரு. பெ. சு. திருவேங்கடம்,
திரு. எம். முத்தையா,
திரு. என். பழனிவேல், மற்றும்
திரு. ஆர். அண்ணாநம்பி.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரக் குடிநீர்த் திட்டமான தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு 1987–88 ஆம் ஆண்டு வரை செய்யப் பட்டுள்ள செலவு எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

| | (ரூபாய் கோடி.) |
|---|---|
| தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு ஆந்திர எல்லையில் அமையும் பணிகளுக்கு 1987–88 ஆம் ஆண்டு முடிய செலவு .. .. .. .. | 248.12 |
| இதில் தமிழகத்தின் பங்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகை .. .. .. | 68.66 |
| ஆனால் இதுவரை தமிழகம் கொடுத்த தொகை (1987–88 வரை) .. .. .. | 47.00 |
| சென்னை குடிநீர்த் திட்டத்தில் தமிழ்நாட்டில் அமையும் பணிகளுக்கு 1987–88 முடிய செலவு | 11.58 |
| மொத்தச் செலவு 1987–88 முடிய .. | 58.58 |

*1813.—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெலுங்கு கங்கைத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குக் கொண்டுவரப்படும் குடிதண்ணீர் திறந்தவெளி வாய்க்கால் மூலம் கொண்டுவர திட்டம் போடப்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) இதனால் பல இடையூறுகள் ஏற்படும் என்பது அரசுக் குத் தெரியுமா ?

(இ) இதுபற்றி நிபுணர் குழு ஆய்வு செய்துள்ளதா ?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS